RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22s127

# சங்க இலக்கியங்களில் இழையணி

வை. கஜேந்திரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி-620019, தமிழ்நாடு, இந்தியா.

# Ilaiani in Sangam Literature

V. Gajendran [a, *]

[a] Department of Tamil, Urumu Dhanalakshmi College, Thiruchirapalli-620019, Tamil Nadu, India.

* Corresponding Author:
Khan.gaja32@gmail.com

Received: 24-03-2021
Revised: 11-01-2022
Accepted: 19-01-2022
Published: 25-02-2022

Check for updates

**ABSTRACT**

Did the term ilaiyani found in Sangam literature refer to the dimly lit Thali? Is the study. Sangam Literature Thali is a type of necklace worn by men, i.e. a necklace made of leopard skin. Sangam literature included singing and sum. The Sangam period was able to describe the living conditions of the people. They bear witness to the fact that the people of the Sangam period lived a pure civilized life. Most of the time, the leader has been living in the house with the consent of the leader. However, do they wear female thali during marriage? Have you studied their direct rhetoric? Is set to raise doubts about. Considering them, would the rhetoric of "fiber" be thali? Or was that impression imposed? This article is approached with consideration

**Keywords:** Kurunthogai, Nattrinai, Silappatikaram, Pathupattu, Ainkurunuru, Purananuru, Akananuru.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் பாட்டும் தொகையும் அடங்கியன. சங்க கால மக்களின் வாழ்வியல் நிலைகளை எடுத்துரைக்க வல்லன. சங்க கால மக்கள் செம்மையான பண்பட்ட வாழ்க்கையினை வாழ்ந்து வந்தனர் என்பதற்கு அவைகள் சான்று பகர்வன. பெரும்பாலும் தலைவன் தலைவியர் உடன்போக்கு மூலமே இல்லறம் நடத்தி இன்புற்று வாழ்ந்து வந்துள்ளனர். எனினும் அவர்கள் திருமணத்தின் போது பெண் தாலி அணிந்துள்ளனரா? அவற்றின் நேரடியான சொல்லாட்சியில் பயின்று வந்துள்ளனவா? என்பது பற்றி ஐயம் எழுவதாகவே அமைகிறது. அவற்றைக் கருத்தில் கொண்டு "இழையணி" என்னும் சொல்லாட்சி தாலியாக இருக்குமோ? அல்லது அக்கருத்தாக்கம் திணிக்கப்பட்டதா? என்பதைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரை அணுகப்படுகிறது.

## ஹென்றி மார்கன்

திருமணம் ஆதிகாலத்திலிருந்தே சமூகத்தில் நிலவி வருகிறது. ஆயினும் அது எந்த வடிவத்தில் இருந்தது என்று தெரியவில்லை. பழங்காலத்தில் சமூகத்தில் திருமணம் என்று எந்த ஏற்பாடும் நிலவவில்லை. மக்கள் கட்டுபாடற்ற புணர்ச்சி நிலை (**Promiscuity**) என்ற நிலையில் வாழ்ந்தார்கள் என்று கூறுகிறார். அதற்குப் பிறகு திருமணம் ஒரு படிமலர்ச்சி முறையில் தோன்றி நிலை பெற்றது என்பது இவர் கருத்து.

முதலில் உடன் பிறந்தோர் தங்களுக்குள் பாலின உறவு வைத்துக் கொண்டு கூட்டாக இல்வாழ்க்கை நடத்தும் நிலை (Consangnine family) தொடங்கியது. சிலகாலம் கழித்து இந்த ஏற்பாட்டு

முறையில் மாற்றம் ஏற்பட்டது. உடன் பிறந்தோர் மணமுடிப்பது. மறைந்து ஒரு குடும்பங்களை சேர்ந்த ஆண்களைக் கூட்டாக மணந்து வாழும் குழுமணவாழ்க்கை ஏற்பட்டது. அதற்கு பிறகு ஓர் ஆணும் பெண்ணும் தங்களுக்குள் எந்தவிதமான உண்மை நிலையும் கட்டுப்பாடும் இல்லாத நிலையில் விரும்புகிற வரையில் இல்வாழ்க்கை என்று ஒரு நிலையமைப்பில்லாத வாழ்க்கை வாழும் நிலை ஏற்பட்டது. பின்னர் ஒரு மனிதன்பல பெண்களை மணந்து வாழும் நிலையமைப்பான திருமண வாழ்க்கை நிலை (Patriarchal Family) தோன்றியது. அதற்கு பின்னர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அளவிலான திருமண முறை (Monoganian Family) ஏற்பட்டது என்று மார்கன் கூறுகிறார் (Balusamy, 1991).

## அகவாழ்க்கை

அக ஒழுக்கத்தை ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என எழுவகையாக விரித்து விளக்கப்படுகின்றன. ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியுமாகிய காதலர் இருவர் இல்லிருந்து நல்லறஞ் செய்தற்கு இன்றியமையாத அன்பின் வழிப்பட்ட உள்ளத்துணர்ச்சியே ஐந்திணை எனப்படும். களவியலில் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்னும் தமிழர்களுக்கு உரியதாக சொல்வது உண்மை. ஆனால் தாலி என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது. காரணம் சங்கச் செய்யுளில் அவை புலிப்பல் தாலியைச் சிறார்க்கு அணிவித்தனர் (Swaminatha Iyer, 1962). பகையரசனின் தலையில் அணிந்த பொன்முடியினை உருக்கு வீரக்கழல் செய்து மன்னர் காலில் அணிந்தனர். நெடுஞ்செழியன் கிண்கிணி களைந்த காலில் வீரக்கழல் அணிந்தான். தோளில் அணிந்த கொடியை நீக்கி, வில்லைப் பற்றினான். கண்ணியும் தாரும் அணிந்து ஐம்படைத் தாலியை அகற்றா நிலையில் போர்ச் சொன்றான். பால்விட்டு உணவும் இன்று தான் உண்ணத் தொடங்கினான் என நெடுஞ்செழியன் பற்றி குறிப்பு இடம் பெறுகிறது.

## சிலம்பு கழி நோன்பு

இளம் பருவந் தொடங்கித் திருமணம் வரை பெண்களின் காலில் சிலம்பணிவது சங்க கால வழக்கம். இரவுக்குறியில் தலைவன் கூடச் சென்ற போதும், தலைவனோடு உடன் போய் இருந்த காலத்தும் தலைவி சிலம்பு அணிந்திருந்தாள் என்பதனை (அகம் 198) (குறுந் 7) பாடல்களில் காணலாம். குமரித்தன்மை கடந்து மணந்தாள் என்பதைக் காட்டச் சிலம்புகழி நோன்பு நிகழ்த்தினர். சிலம்பைக் காலினின்றும் நீக்கும் இச்சடங்கினைத் திருமண விழாப் போன்று கொண்டாடுவது சங்க காலச் சமுதாய மரபாகும். உடன்போக்குச் சென்ற தலைவிக்குத் தலைவனது ஊரிலேயே சிலம்புகழி நோன்பு நடந்த பின் திருமணம் நடைபெறும் தன் மகளுக்குத் தலைவன் ஊரில் சிலம்புகழி நோன்பு நடத்தப்பட்டமையின் நற்றாய் மனம் நொந்து பேசுவதையும் சினந்து பேசுவதையும் அகநானூறு 385 நற்றிணை 275 செய்யுள்கள் புலப்படுத்துகின்றன. சிலம்புகழி நோன்பு தலைவன் ஊரில் நடந்தாலும் திருமண விழாவானது தன் வீட்டில் நிகழ்வதாகுக எனத் தன் வேட்கையைத் தாய் புலப்படுத்துகிறாள்.

நும்மனைச் சிலம் கழீஇ அயரினும்

எம்மனை வதுவை நன்மணம் கழிக

என்று அடிகளிலும் காணமுடிகிறது (Venkatasamy Nattar, 2002).

## தாலி

திருமணமானவள் என்பதைப் பிறர் அறிய உதவும் அடையாளமாக திருமண நாளன்று மணமகள் கழுத்தில் மணமகனால் தாலிஅணிவிக்கப்படுகின்றது. நீளமாகத் தொங்கும் பிற அணிகளைத் தற்காலத்தில் தாழ்வடம், வடம், சரம், மாலை, சங்கிலி, இழை போன்ற வேறு பெயர்களால் குறிக்கப்படுகின்றது. ஏறத்தாழ 10ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை தாலி என்னும் சொல் தொங்கும் அணிகளைக் குறிக்கவே பயன்பட்டது. சங்க இலக்கியமாகிய அகநானூற்று மருதப் பாடல்களான 86,136 என்னும் இரு பாடல்களினின்றும் தமிழர் திருமண முறை குறித்துச் சில செய்திகள் கிடைக்கின்றன. திருமண விருந்து நன்னாளில் திருமணம் நடைபெறுதல், மணமனை அலங்காரம் தலைவியை மங்கல

நீராட்டுதல், மணமகளுக்குக் காப்புக்கட்டுதல் வாழ்த்துதல், ஓரில்லிற் கூட்டுதல் போன்றவையாகும். இதனை,

வாலிழை மகளிர் நால்வர் கூடி

கற்பினின் வழாஅ நற்பலஉதவிப்

என்ற வரிகள் மணமகட்கு மகளிர் மங்கல நீராட்டும் வழக்கத்தைக் கூறுகின்றது. இவ்வடியில் வரும் இழை என்ற சொல் மங்கல அணியைக் குறித்து எனலாம் (Venkatasamy Nattar, 2002).

"மழைப்பட்டன்ன மணன்மலி பந்தர்

இழையணி சிறப்பின் பெயர் வியர்ப் பாற்றி

என்ற அடிகளின் மூலம் "இழை" என்ற சொல் தாலி எனக் கருதலாம் (Venkatasamy Nattar, 2002). "இழையணி சிறப்பு" என்ற தொடரில் சிறப்பு என்பதன் பொருள் "விழா" என்பதாகும். ஆகவே இழையணி என்பது தாலி அணிவிக்கும் விழா எனப் பொருள் பெறும் எனக் குறிப்பிடுகின்றார் (Sasivalli, 2000).

"இழையணி பணைத்தோள் ஐயை தந்தை

மழைவளம் தரூஉம் மாவண் தித்தன்"

மேற்கண்ட அடிகளில் ஐயை என்பவள் இழையணியை பனைப்போன்ற தோள்களில் அணிந்துருள்ளமைப் புலனாகிறது (Venkatasamy Nattar, 2002).

## மருதநிலம்

சமூக கட்டமைப்பில் குடும்பத்தில் மனைவி என்பவள் மனையை ஆழ்பவள். குடும்பம் என்ற நிறுவனத்திற்கு அடித்தளம் அமைத்தது மருதநிலமாகும். முறையாக இல்லறம் நடத்திய சுவடு மருதத் திணைப் பாடல்களில் காணப்படுகிறது. மனித சடங்குமுறையில் தலையாயது திருமணமாகும். இவைச் சுற்றத்தார் வாழ்த்த நடைபெற்ற செய்தியை

"வதுவை நல் மணம் கழிந்தபின்றை

கல்லன் கம்மையர் ஞெரெனப் புகுதந்து

பேர் இற்கிழத்தி ஆக எனத் தமர்தர.

என்ற அடிகளின் மூலம் அறியலாம் (Venkatasamy Nattar, 2002).

பலரும் உணவு உண்ணச் செய்து, உழுந்துகளி சமைத்துப் பலரோடு உண்டு வாழ்த்தவும் பறவைகள் நிமித்தம் இனிதாக விளங்கிடச் சந்திரன் உரோகிணியைச் சேரும் நல்ல நாள். அந்நாளில் திருமண வீட்டை அலங்கரித்தனர். இறைவனை வணங்கினர். முரசுகள் முழங்கச் சில மகளிர் கூடி மணப்பெண்ணை நீராட்டினர். அவளது அழகை அம்மகளிர் பார்த்து வியந்துப் பார்த்து நாணி மறைந்தனர். இதனை,

வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்

பூக்களும் இமையோர் நோக்கு புமறைய"

என்ற அடிகளின் வாயிலாக அறியமுடிகிறது (Venkatasamy Nattar, 2002).

## பத்துப்பாட்டில் இழை

இழை-இழைப்பு வேலைப்பாடு கொண்ட நகை, இழை எனப் பெயர் பெற்றது. பொன்னைக் கம்பிகளாக இழைத்துச் செய்யப்பட்ட நகை, இழை எனப்பட்டது போலும். கல்லிழைத்த நகை என்பது இக்கால வழக்கிலும் உள்ளதேயாகும். எனவே பொன்வடங்களும் கல்இழைத்துச் செய்யப்பட்ட நகைகளும் இழை எனப் பெயர் பெற்றிருக்கலாம். பின்பு காலப்போக்கில் இழை என்பது எல்லா நகைகளையும்

குறிக்கலாயிற்றுப் போலும்! மணிகளைப் பொன்னில் இழைத்து அணி (அழகு) செய்யபெற்றது. அணியிழை எனவும் ஒளிபொருந்திய இழை ஒளியிழை எனவும் ஒளிவிளங்கித் தோன்றிய இழை இலங்கிழை எனவும் பசும் பொன்னாலும், செம்மணிகளாலும் ஆக இழைசேயிழை எனவும், பசும்பொன்னாலும் பாசிமணிகளாலும் ஆன இழை பாசிழை எனவும், பொன்னாலும் மணியாலும் வேலைப்பாட்டாலும் மாண்புற்று விளங்கிய இழை மாணிழை எனவும், இழைகளுள் ஆராய்ந்து எடுக்கப்பட்டது ஆயிழை எனவும் பெயர் பெற்றன எனப் பத்துப்பாட்டின் வாயிலாக அறியலாம் (Rasamanikkanar, 2012).

## திருமண தொடர்பான நடைமுறைகள்

திருமணம் பேச முதியோர் செல்லுதல் பண்டைய வழக்கமாகும். நன்னிமித்தம் பார்த்து, திங்களுடன் உரோணி சேர்ந்த நன்னாளில் விடியற்காலையில் மனையை அணிசெய்து, விளக்கேற்றி, மாலைகளைத் தொங்கவிட்டு, மணமுழவும், முரசும், சங்கும் ஒலிக்கத் தலைவிக்கு மணநீராட்டினர். வாகை இழையோடு அறுகம்புல்லின் கிழங்கு முனையைச் சேர்த்துக் கட்டிய நூலைச்சூட்டினர். உச்சந்தலையில் குடமும் கையகத்தே மண் கலமும் உடைய முதிய மங்கல மகளிர் மணத்தை நிகழ்த்தினர். மக்கட்பேறு வாய்ந்த மகளிர் நால்வர் கூடிக் கற்பு வழாமல் நல்ல அறம்பல செய்க. கொழுநனைப் பேணி ஒழுகுக. தக்க வாழ்க்கைத் துணையாகுக என மணப்பெண்ண வாழ்த்தினர்.

## முடிவுரை

மேற்கண்ட கருத்துக்களின் வாயிலாக இழையணி என்ற சொல் தாலியைக் குறிப்பதாக தெரியவில்லை. தாலி என்பது சிறுவர்களுக்கு புலிப்பல் கோர்த்து அணிவிக்கப்படும் அணிகலன் என்பது தெரிகிறது.

## References

Balusamy, Na., (1991) Vazhaviyal kalanjiyam, Tamil University veeliedu, Thanjavur, Tamil Nadu, India.

Rasamanikkanar, Ma., (2012), Decimal Research, Sagittarius Academy Chennai, Tamil Nadu, India.

Sasivalli, Su., (2000) Tamil Marriage System, World Tamil Research Institute, Chennai, Tamil Nadu, India.

Swaminatha Iyer, U.V., (1962) Purananuru, Source and Text, U.V.SA. Library, Chennai, Tamil Nadu, India.

Venkatasamy Nattar, Na.Mu., (2002), Akananooru, Sharda Publishing House, Chennai, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License